## கொடைக்கானல் நகராட்சி

2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ஆம் நாள் (29.10.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நட்சத்திர ஏரியில் படகு இயக்குதல் தொடர்பாக கொடைக்கானல் போட் அன்டு ரோயிங் கிளப் நிறுவனம் மூலம் கீழ்கண்ட விபரப்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமதுமுகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. வழக்கறிஞரின் 31.8.2021ம் தேதிய கடிதத்தில் இவ்வழக்கிற்கான வழக்கு கட்டணமாக ரூ.10,000/– (பத்தாயிரம் மட்டும்) வழங்ககோரி தெரிவித்துள்ளார். இவ்வழக்குக்கான கட்டணத்தை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண் | பெயர் |
|---|---|---|
| 1. | WP(MD)No.15296 of 2021 | செயலாளர் கொடைக்கானல் போட் அன்டு ரோயிங் கிளப் |

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.3237/2021/எப்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1142, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்த அறிவிப்பினை கீழ்க்கண்ட தொழில்மலர் நாளிதழில்களில் விளம்பரமாக வழங்கிட திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 165/செமதொ/2021 நாள். 9.8.2021 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வளர்ச்சி பணிகள் குறித்த விபரத்தினை கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரமாக வெளியிட்டவகையில் கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வழங்க நாளிதழ் நிறுவனங்களால் கோரப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | The Daily Thanthi Bill No. 2122DGL231001219 | 15.10.2021 | 26880/– |
| 2 | தினமலர் | -- | 16.10.2021 | 32550/– |
| 3 | தினகரன் | KAL PUBLICATIONS(P)LTD., Bill No. 3300308100 | 13.10.2021 | 37800/– |

மேற்கண்ட நாளிதழின் பட்டியலின்படி தொகையினை நாளிதழ் நிறுவனங்களுக்கு பொது நிதியின் மூலம் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1143, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சி 31.05.1994 –ல் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 21.45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகள் அமைந்துள்ளன. மலைகளின் இளவசரசி என அழைக்கப்படும் இந்நகரம் இந்தியாவின் மிக முக்கிய சுற்றுலா நகரமாகும். 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 36501 ஆகும். இந்நகராட்சியில் 125 கி.மீட்டர் நகராட்சி சாலையும், 54 கி.மீட்டர் நெடுஞ்சாலைத் துறை சாலைகளும் ஆக மொத்தம் 175 கி.மீட்டர் சாலைகள் உள்ளது.

இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 10000 மேல் உள்ளது. மேலும், கோடை காலஙகளில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தினசரி 50000 மேல் உள்ளது.

இந்நகராட்சி பகுதியில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | 40வாட்ஸ் குழல் விளக்குகள் | 247 |
| 2 | 65 வாட்ஸ் CFL விளக்குகள் | 1413 |
| 3 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 46 |
| 4 | HML | 222 |
| 5 | 65 வாட்ஸ் LED விளக்குகள் | 1815 |
| | மொத்தம் | 3743 |

இதில் அனைத்து மின் விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றம் செய்திடவும், மேலும், 587 மின் விளக்குகள் கூடுதலாக அமைத்திட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | Already Converted in LED | 1825 Nos |
| 2 | Proposal Submitted for conversion of LED | 1918 Nos |
| 3 | Proposal Submitted for Additional LED Lights | 587 Nos |
| | Total | 4330 Nos |

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21787/2021/EA2 நாள். 02.10.2021 –ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி, கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| Details of the activities | Base data | Norms | Wireman | Norms | Electrical Helper |
|---|---|---|---|---|---|
| | | | R | | R |
| Other than LED Lamp Fitting | 1928 | 1 per 600 | 3 | 1 per 600 | 3 |
| LED light fitting lamp post | 1815 | 1 per 1800 | 1 | 1 per 1800 | 1 |
| | | | 4 | | 4 |

எனவே கொடைக்கானல் நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் இணைப்பு படிவத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகோலின் படி மேற்கொள்வதற்கு நிரந்தர மின் பணியாளர்கள் மற்றும் மின் கம்பி உதவியாளர்கள் இல்லாத நிலையில், இந்நகராட்சிக்கு மின் கம்பியாளர் 6 எண்ணிக்கையும், மின் கம்பி உதவியாளர் 2 எண்ணிக்கையும் தேவையாக உள்ளது.

இதற்காகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.22.66 இலட்சம் ஆகும். எனவே, கொடைக்கானல் மலைப்பிரதேசமாக இருப்பதால் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ளவும், செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1144, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி 31.05.1994 –ல் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 21.45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகள் அமைந்துள்ளன. மலைகளின் இளவசரசி என அழைக்கப்படும் இந்நகரம் இந்தியாவின் மிக முக்கிய சுற்றுலா நகரமாகும். 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 36501 ஆகும். இந்நகராட்சியில் 125 கி.மீட்டர் நகராட்சி சாலையும், 54 கி.மீட்டர் நெடுஞ்சாலைத் துறை சாலைகளும் ஆக மொத்தம் 175 கி.மீட்டர் சாலைகள் உள்ளது. இந்நகர் பகுதியில் 120 கி.மீட்டர் நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய்களும், 820 எண்ணம் வால்வுகளும், 16 எண்ணம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 10000 மேல் உள்ளது. மேலும், கோடை காலஙகளில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தினசரி 50000 மேல் உள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21787/2021/EA2 நாள். 02.10.2021–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி, குடிநீர் பராமரிப்பு பணிக்கு தேவையான பணியாளர்கள் கணக்கிடப்பட்டு மதிப்பீடு ஆண்டுக்கு ரூ. 112.84 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

கொடைக்கானல் நகராட்சியின் தலைமை நீர்த்தேக்கத்தில் இருந்து நகர் பகுதிக்கு சீரான குடிநீர் வழஙகும் பொருட்டு இணைப்பு படிவத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகோலின்படி மேற்கொள்வதற்கு நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில் வெளிக் கொணர்வு முகமை (Out Source) மூலம் மேற்கொள்ளவும் செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கோள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1145, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகரம் சுற்றுலா நகரம் என்பதினால், நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் சேதாரங்களை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. கொடைக்கானல் நகராட்சி சாலைகளை உடனுக்குடன் செம்மைப்படுத்திட பழனி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் 20.10.2021 ம் தேதிய நேராய்வில் அறிவுரை வழஙகப்பட்டுள்ளது. எனவே, நகர் பகுதியில் 1 முதல் 12 வரையிலான வார்டுகளில் உள்ள தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் சாலைகளை செப்பனிட பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 9.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மதிப்பீட்டின்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும், செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1146, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகரம் சுற்றுலா நகரம் என்பதினால், நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் சேதாரஙகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. கொடைக்கானல் நகராட்சி சாலைகளை உடனுக்குடன் செம்மைப்படுத்திட பழனி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் 20.10.2021 ம் தேதிய நேராய்வில் அறிவுரை வழஙகப்பட்டுள்ளது. எனவே, நகர் பகுதியில் 13 முதல் 24 வரையிலான வார்டுகளில் உள்ள தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் சாலைகளை செப்பனிட பொது நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 9.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மதிப்பீட்டின்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும், செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1147, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 12.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு செய்த வகையில் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர்(திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | காந்திபுரம் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளில் பகிர்மான குழாய்கள் பதித்தல் | **6.20** | எம். கென்னடி<br><br>பி. சுப்பிரமணி | **0.05** %குறைவு<br><br>**0.17** %அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | சத்தியா நகர் மற்றும் வசந்தா நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளில் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 5.70 | எம். கென்னடி<br><br>பி. சுப்பிரமணி | 0.09 %குறைவு<br><br>2.77 %அதிகம் |
| 3 | கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் வால்வுகள் பழுது சரி செய்தல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணி | 10.00 | எம். கென்னடி<br><br>பி. சுப்பிரமணி | 0.04 %குறைவு<br><br>0.13 %அதிகம் |
| 4 | எம்.எம்.சாலையில் எம்.ஜி.ஆர். நகர் மற்றும் கலைஞர் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளில் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 3.50 | எம். கென்னடி<br><br>பி. சுப்பிரமணி | 0.09 %குறைவு<br><br>0.37 %அதிகம் |
| 5 | செண்பகனூர் கே.பி.எம். பாறை பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளில் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 4.90 | ஜி. சிவக்குமார்<br><br>பி. சுப்பிரமணி | 0.03 %குறைவு<br><br>0.33 %அதிகம் |

அலுவலக குறிப்பு. 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1148, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான TN 57 AY 5392 வாகனத்திற்கு காப்பீட்டு தொகை செலுத்திட தெரிவித்து தி நியூ இந்தியா அசூரன்ஸ் நிறுவனத்தின் பட்டியல் பெறப்பட்டுள்ளது. (Policy No.730100/31/20/01/7141)

1. TN 57 AY 5392 12680/-

பட்டியலின்படி மேற்க்கண்ட தொகையினை தி நியூ இந்தியா அசூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி வாகனத்தின் காப்பீடு புதுப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல குறிப்பு . 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி வாகனத்தின் தேவையினை கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1149, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலையினை தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு பொதுமக்களிடம் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நகர் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. டேவிட் தங்கராஜ்
GTR ஆடியோஸ்,
அண்ணாநகர்,
கொடைக்கானல்.
நாள் ஒன்றுக்கு ரூ.1800/–
( வாகனம், மைக்செட், டீசல், பேட்டரி உட்பட)

2. நியூ மல்லிகா ஆடியோஸ்,
இந்திராநகர்,
கொடைக்கானல்.
நாள் ஒன்றுக்கு ரூ. 2000/–
( வாகனம், மைக்செட், டீசல், பேட்டரி உட்பட )

3. அன்னை சவுண்ட் சர்வீஸ், டர்னர்புரம், கொடைக்கானல். — நாள் ஒன்றுக்கு ரூ. 2500/– ( வாகனம், மைக்செட், டீசல், பேட்டரி உட்பட )

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள GTR ஆடியோஸ், கொடைக்கானல் மூலம் விழிப்புணர்வு அறிவிப்பு பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. கொரோனா வைரஸ் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை நகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளவும், அரசு நிதி ஒதுக்கீடு பெறும் பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1150, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் சாலைகள் , தெருவிளக்குகள், குடிநீர் பகிர்மான குழாய்களை GIS முறையில் அளவீட செய்திடும் பணிக்கு 5.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | கொடைக்கானல் நகராட்சி பகுதியில் GIS உதவியுடன் சாலை விபரஙகள், தெருவிளக்குகள், குடிநீர் விநியோக குழாய்கள், வடிகால்கள் ஆகியவற்றை அளவீடு செய்து வரைபடஙகளுடன் சாலை பதிவேடு தயார் செய்யும் பணி | 9.80 | 1)அயோத்தி கன்சல்டன்ஸி, ராஜபாளையம்<br>2)ஸ்ரீதர் கன்சல்டன்ஸி, எஸ்.எஸ்.காலணி, மதுரை | 0.12% குறைவு<br>3.41% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ். அயோத்தி கன்சல்டன்ஸி, ராஜபாளையம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1151, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான TN57 AS 0817 பொலிரோ வாகனம் இதுவரை 2,00,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது.இவ்வாகனத்தின் பராமரிப்பு பணி 60,000 கி.மீட்டருக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டியது. அதன்படி வாகன உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ள விலைப்பட்டியல் கோரப்பட்டதில் உத்தேச மதிப்பு ரூ. 1,29,484/– க்கு பெறப்பட்டது. (Quotation No. QTN22A000186 dated 17.08.2021). இவ்வாகனத்தின் பழுது பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானத்தில் ரூ. 1,29,484/– க்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது வாகனத்தின் பழுது பணி மற்றும் பராமரிப்பு பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ. 1,36,015/– வழஙக கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் தொகை ரூ. 6,531/– க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.

2.வாகனத்தின் பயன்பாட்டினை கருத்தில் கொண்ட அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1152, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) வடகிழக்கு பருவமழை தற்போது துவக்கி உள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு கருவிகள் தயார் நிலையில் வைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே வாஙகப்பட்ட பொருட்கள் அனைத்தும் பழுதடைந்து சேதமடைந்துள்ள நிலையில் தற்போது கூடுதலாக பாதுகாப்பு கருவிகள் கீழ்க்கண்ட விவரப்படி தேவையாக உள்ளது.

| | | |
|---|---|---|
| மணல் மூட்டைகள் | – | 1200 எண்ணம் |
| Power Saw | - | 5 எண்ணம் |
| நைலான் ரோப் | – | 5 ரோல் |
| PICKUP JEEP | - | 2 No (For Rent ) |
| JCB | - | 1 No (For Rent) |

எனவே. மேற்கண்ட விவரப்படி தேவையான பொருட்கள் வாஙகிக் கொள்ளவும், JCB & Pickup jeep வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 8.00 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியப்பணி என்பதால் மேற்கண்ட பணியினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1153, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) கொடைக்கானல் நகராட்சி அண்ணாசாலை KAS Shoping Complex அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திருமதி.அமுதவள்ளி, க/பெ. கார்த்திகேயன் என்பவரால் அனுமதிக்கு மாறாக STD பூத் அமைத்து ஆக்கிரமிப்பு செய்ததை நகராட்சியால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது தொடர்பாக நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து, மேற்படி வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. வழக்கறிஞரின் 22.09.2021ம் தேதிய கடிதத்தில் இவ்வழக்கிற்கான வழக்கு கட்டணமாக ரூ.10,000/– (பத்தாயிரம் மட்டும்) வழங்கக்கோரி தெரிவித்துள்ளார். இவ்வழக்குக்கான கட்டணத்தை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண் | பெயர் |
|---|---|---|
| 1. | WP(MD)No. 1810 of 2021 | K.அமுதவள்ளி |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.904/2021/எப்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1154, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தினை பொது நிதியின் கீழ் மராமத்து செய்யும் பணிக்கு 24.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | கொடைக்கானல் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தினை மராமத்து செய்து புதுப்பித்தல் | 9.80 | பி.முரளி<br>எம்.ஆர்.பிலால் இப்ராஹிம் | 0.28% குறைவு<br>1.25% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.முரளி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1155, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

15) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 20.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ரைபிள் ரேஞ்ச் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் விஸ்தரிப்பு செய்தல் (480 Rm) | 8.86 | துர்க்கா என்ஜினியரிங ஒர்க்ஸ், மதுரை<br>வெஙகடேஷ் இன்ஜினியரிங ஒர்க்ஸ், மதுரை. | 0.09 %குறைவு<br>2.77 %அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1156, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

16) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் ஆனந்தகிரி 4–வது தெருவில் கஜா புயலினால் சேதமடைந்துள்ள தடுப்பு சுவரினை சீரமைத்தல் பணிக்கு 06.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ஆனந்தகிரி 4வது தெருவில் கஜா புயலினால் சேதமடைந்துள்ள தடுப்பு சுவரினை சீரமைத்தல் | 3.90 | அ. அந்தோணி பெர்ணாண்டோ<br>ஆர். அஙகப்பன் | 0.43 %குறைவு<br>0.46 %அதிகம் |

அலுவலக குறிப்பு.	வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு அ. அந்தோணி பெர்ணாண்டோ என்பவரி ன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1157, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

17) கொடைக்கானல் நகராட்சியில் மூலதன மானிய நிதி ( CGF 2021-2022) ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பித்திட தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 19089/2021/இ2 நாள். 27.10.2021 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கொடைக்கானல் ஏரி சுற்றுச் சூழல் மேம்படுத்துதல் | 3200.00 |
| 2 | புதிய கழிப்பறைகள் கட்டுதல் 2 எண்ணம் | 40.00 |

அதன்படி, மேற்கண்ட பணிகளை மூலதன மானிய நிதி ( CGF 2020-2021) ன் கீழ் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கிட கோரி பிரேரணையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.	1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மதிப்பீட்டுத் தொகையினை முழு மானியமாக வழங்கிட பிரேரணை சமர்ப்பித்திடலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1158, நாள். 29.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஓம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.